ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,873/2 - 1969 සැප්තැම්බර් 28 වැනි ඉරිදා - 1969.9.28
14,873/2 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல். ட.—பீ. 27/39

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆவது பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக 1969 யூலை 25 ந் திகதிய 14,863/6 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்திலுள்ள தொடங்கொடைக் கிராமப் பிரதேசத்தில் தற்பொழுதுள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமான அறிவித்தலை, அதனோடுள்ள அட்டவணையின் 2 ஆவது நிரையில் 2, 10 ஆகிய வட்டாரங்களின் விவரணத்துக்குப் பதிலாக இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரணங்களை இடுவதன் மூலம் திருத்துகிறேன்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 28 ந் உ.

ஆர். ப்‍ரேமதாஸ,
உள்ளூராட்சி அமைச்சர்.

அட்டவணை

**2 ம் வட்டாரம்—எலதுவை**

எலதுவை, கல்பொட்டேவெலை ஆகிய கிராமங்களையும் அப்லெத்வத்தை, அன்ஞசிகலவத்தை (பகுதி) ஆண்டியகந்தவத்தை, எலதுவவத்தை ஆகிய தோட்டங்களையும் உள்ளடக்கியது.

**10 ம் வட்டாரம்—துடுகலை**

துடுகலைக் கிராமத்தையும் ஹத்தங்கல்லவத்தை, லக்ஷ்மிவத்தை துடுகலைக் குழுவிலுள்ள துடுகலைப் பிரிவு ஆகிய தோட்டங்களையும் உள்ளடக்கியது.

9–250/1.

---

ச. வ.—பீ. 27/39.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான், இவ்வறிவித்தல் வாயிலாக, 1969 யூலை 22 ந் திகதிய 14,863/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கேகாலை மாவட்டத்து தெஹிகம்பல் கோறளை எகொட பொத்தபற்றுக் கிராமப் பிரதேசத்திலுள்ள வட்டாரங்களின் உட்பிரிவினை சம்பந்தமான அறிவித்தலை

(அ) அதன் கண்ணுள்ள (இ) ஆம் உட் பந்தியை விட்டு விடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) (ஈ) ஆம் உட்பந்தியை (இ) ஆம் உட்பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும்

திருத்துகிறேன்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு செபதெம்பர் மீ 26 ந உ.

ஆர். ப்‍ரேமதாஸ,
உள்ளூராட்சி அமைச்சர்.

9–250/2.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.